வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 2775/ஆ2/2023 நாள் 02.11.2023

பொருள் : பள்ளிக்கல்வி – உடற்கல்வி – புதுக்கோட்டை மாவட்டத்தில் 14 பிரிவினருக்கு பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு குடியரசுதின குழு போட்டி (RDG) 02.02.2024 முதல் 07.02.2024 வரை விளையாட்டு போட்டிகள் நடைபெறுதல் – சார்பு

பார்வை : 1. புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 7954 /ஆ4 /2023 நாள். 18.01.2024
2 புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 7954 /ஆ4 /2023 நாள். 29.01.2024

----

பார்வை 1இல் காணும் செயல்முறைகளின் படி 2023 – 24 ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான 14 பிரிவினருக்கு பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு குடியரசுதின குழு போட்டி (RDG) 02.02.2024 முதல் 04.02.2024 வரை மாணவிகளுக்கும், 05.02.2024 முதல் 07.02.2024 வரை மாணவர்களுக்கும் பல்வேறு மையங்களில் நடைபெறவுள்ளது.

அதன்பொருட்டு வேலூர் மாவட்டத்தின் சார்பாக மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்களை உரிய பாதுகாப்புடன் அழைத்து சென்று போட்டியில் பங்கேற்க செய்யவும்.

மேலும் பார்வை – 2 இல் காணும் கடிதம்படி வேலூர் மாவட்டத்தில் பணியாற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள சார்ந்த ஆசிரியர்கள் நடுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நடுவர்களுக்கான கூட்டம் 01.02.2024 அன்று மாலை 7.00 மணிக்கு நடைபெறும். எனவே நடுவராக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களை 31.01.2024 தேதி பிற்பகல் முதல் பணிவிடுப்பு செய்து அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.

1. ஆசிரியர்களின் பெயர் பட்டியல்
2. போட்டிகளுக்கான அட்டவணை

// ஓம் //

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்
அரசு/ நிதியுதவி/ மெட்ரிக் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.